**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Judicial Magistrate No.II, Mayiladuthurai

**CC. No. 104/2025**

**Deposition of LW6 examined as PW6 (மகசர் சாட்சி)** Dt. 28.10.2025

| | |
|---|---|
| Name | சண்முகம் |
| Husband Name | ராஜகண்ணு |
| Village | கஞ்சாநகரம் |
| Taluk | தரங்கம்பாடி |
| Age | 47/2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day 28.10.2025

(Accused present.)

**முதல் விசாரணை**

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து மயிலாடுதுறையில் டிரைவர் வேலை செய்து வருகிறேன். தேதி, மாதம் நினைவில் இல்லை. கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்பு கஞ்சாநகரம் பேருந்து நிறுத்தம் அருகே எனது மனைவி டீ கடை நடத்தி வருகிறார். இரவு 9.00 மணியளவில் நான் அங்கிருந்த போது நாகப்பட்டினம் குடிமை பொருள் வழங்கல் உதவி ஆய்வாளர் என்னிடம் கையொப்பம் மட்டும் பெற்று கொண்டார். கையொப்பம் செய்த தாளில் என்ன விபரம் எழுதியிருந்தது என எனக்கு தெரியாது. தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான். **அந்த கையொப்பம் மட்டும் அ.சா.ஆ. 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னிட்டு போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(சாட்சி அரசு தரப்பு வழக்கிற்கு முரண்பட்டு சாட்சியம் அளித்ததால் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதிகோரப்பட்டது. சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது)**

**அரசுதரப்பு குறுக்குவிசாரணை**

ஆஜரில் உள்ள எதிரியை எனக்கு தெரியும். அவர் எனது ஊரை சேர்ந்தவர் ஆவார். கடந்த 31.01.2023 ம் தேதி மதியம் சுமார் 1.00 மணியளவில் நான் கஞ்சாநகரம் பேருந்து நிறுத்தம் அருகே உள்ள சன் ஸ்டோர்ஸ் என்ற எங்கள் கடையில் இருந்த போது நாகப்பட்டினம் குடிமை பொருள் வழங்கல் குற்றபுலனாய்வு துறை உதவி ஆய்வாளர் அவர்கள் போலீஸ் பார்ட்டியுடன் வந்து எனது கடைக்கு அருகில் உள்ள மோகன்தாஸ் என்பவருக்கு சொந்தமான காலிஇடத்தை எதிரி சத்தியசீலன் குத்தகைக்கு எடுத்து அதில் கீத்து கொட்டகை அமைத்து அதில் தமிழக அரசால் வழங்கப்படும் பொது விநியோக திட்ட ரேசன் அரிசியை பிரசாத் என்பவருடன் சேர்த்து பதுக்கி வைத்திருந்தது

சம்பந்தமாக வழக்கு பதிவு செய்திருப்பதாகவும், அது சம்பந்தமாக சம்பவ இடத்தை பார்வையிட்டு எனது மற்றும் மாதவன் என்பவர் முன்னிலையில் பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து அதில் நானும் மேற்படி மாதவன் என்பவரும் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம் என போலீசார் விசாரணையில் கூறிவிட்டு எதிரி எனது ஊர்காரர் என்பதால் எதிரிக்கு ஆதரவாக உண்மைக்கு மாறாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை இல்லை.

என்னால் எழுதிக்கொள்ளப்பட்டு. எதிரியின் முன்னிலையில் சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

28/10/24

நீதித்துறை நடுவர் எண்-11
மயிலாடுதுறை